International Federation of Tamils
18 Rue des Paquis,1201 Geneva, Switzerland
tel/Fax 00 41 22 7320 831 ift@bluewin.ch

## அகவை 75 காணும் ஊடக மூதறிஞர் சிவநாயகம் ஐயா அவர்களை நெஞ்சார வாழ்த்துவோம்!

ஆங்கில ஊடகராக, சிவா ஐயா, உலக ஊடக நீர்ப் படுகையில் கலங்கரைச் சுற்றொளி பாய்ச்சிய பெருமைக்கு உரியவராவார்.
அகவை 75ஐ இந்த மாதம் நிறைவு கண்டிருக்கும் இந்தத் தமிழ்த் தேசிய உணர்வாளர், தமிழீழத் தேசிய விடுதலைப் போருக்கு உலக சமத்துவ ஆதரவையும் மானுட தர்ம நியாயத்தையும் அனைத்துலக மட்டத்திலே திரட்டித்தரும் பணியில் முனைப்பாக ஈடுபட்டவர். தமிழ்த் தேசியத்தைக் கூர்மையாக முன்னிறுத்திய மூன்று ஆங்கில மொழி இதழ்களாக saturday review,Tamil Nation, Hot Spring ஆகியவற்றைக் கொள்ளலாமென்றால், இம் மூன்று இதழ்களின் நிறுவகராகவும் முதல் நிலை இதழாசிரியராகவும் சிவநாயகம் ஐயா அவர்களே சீரிய ஊடகப் பணி புரிந்திருந்தார் என்பதை அறியும்போது, அவருடைய பணியின் கனதியை நாம் புரிந்து கொள்ளலாம். விடுதலைப் போராட்டத்துக்கு உலக அறிவாதரவு திரட்டியவர்களில் இவர் முக்கியமானவர்.

சிவநாயகம் ஐயா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய இரண்டு நூல்கள் அவருடைய ஊடக ஆளுமையையும் அறிவுக் கூர்மையையும் மொழித் திறமையையும் எடுத்தோதுவன. முதலில் வெளிவந்த - எழுத்தாணியும் துப்பாக்கியும் (Pen and Gun) - என்ற நூலிலும் சரி, அண்மையில் வெளியிடப்பட்ட - சிறீலங்கா: வரலாற்றின் சாட்சியம் (Sri Lanka: witness to history) - என்ற நூலிலும் சரி, தாமே நேரடிச் சாட்சியம் பகர்பவராக, அவர் விளங்குகிறார். தமது அனுபவங்கள் ஊடாகத் தாம் பெற்ற மனப் பதிவுகளையே எழுத்துப் பதிவாக அவர் வழங்கியிருக்கிறார். நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ்த் தேசியம் படிப்படியாக ஓரம் கட்டப்பட்டு, ஒடுக்கப்பட்டமையையும், தமிழ்த் தேசிய உணர்வு விழித்தெழுந்து, படிப்படியாகத் துளிர்த்து, வீறு கொண்டு போராட்ட வடிவம் பெற்றமையையும் தமக்குக் கை வந்த ஊடக நேர்த்தியோடு இவர் விளக்குகிறார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலில் 1930 இலே பிறந்த மூதறிஞர் சிவநாயகம் ஐயா, கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிலே கல்வி பயின்றார். இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் பரவிய ஆங்கில நாளேடுகளான டெயிலி நியூஸ், டெயிலி மிரர் ஆகியவற்றின் ஆசிரியர் குழக்களில் பணி புரிந்தார். நாடு நயக்கும் ஊடகனாக அங்கீகாரம் பெற்றார். இலங்கை சுற்றுலாத் துறையின் வெளியீட்டுப் பிரிவிலே சேர்த்தார்.

தமிழ்த் தேசிய போராட்டம் ஆயுதத்தைக் கரத்தேந்தியதும், அதற்கு ஊடக உறுதுணை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு, சற்றடே றிவ்யூ என்ற இதழை யாழ்ப்பாணத்தில் நிறுவி, அதன் ஆசிரியராக சிவா ஐயா, தமிழ்த் தேசிய சேவகம் தொடங்கினார். இந்த ஏட்டின் பணிமனை சிங்கள அரச படைகளினால் எரியூட்டப்பட்டது.

இந்தியாவுக்குத் தப்பி ஓடிய சிவநாயகம் ஐயா, தமிழர் தகவல் மையத்தில் சில காலம் பணிபுரிந்த பின், தமிழர் தேசிய கருத்துச் சங்கமத் தளமான தமிழ் நேசன் என்ற ஆங்கில ஏட்டைத் தொடக்கினார். இவருடைய பேனா வலிமை கண்டு துணுக்குற்ற இந்திய புலனாய்வுப் பிரிவு, கொடிய தடாச் சட்டப் போர்வையோடு, தொடர்பறாச் சங்கிலிப் பிணையல் சிறையாளியாக இவரை அடைத்து வைத்தது. தாங்கொணா நீரிழிவு உபாதையால் வருந்திய போதும், உரிய மருத்துவ பராமரிப்பு மறுக்கப்பட்டதால் சிவா ஐயாவின் உடல் நிலை பெரிதும் பாதிப்படைந்தது. சிறையில் இருந்து நிபந்தனையோடு வெளியே வந்ததும், பிரான்சுக்குத் தப்பியோடியவர், அங்கு அரசியல் அடைக்கலம் பெற்றார். உடல் நலம்

பாதிக்கப்பட்ட இயலா நிலையிலும், தேசியப் போராட்டப் பங்களிப்பு உணர்வு மேலோங்க, பிரான்சிலேயே Hot Spring ஏட்டைத் தொடக்கினார்.

முதுமையும் நோயும் சிவா ஐயாவை இன்று ஓய்வுப் படுக்கையில் சாய்த்துவிட்டன. ஆனாலும், தேசியப் பங்களிப்பு என்று வந்துவிட்டால், அர்ச்சுனா என்ற பெயரிலே முன்னாளில் விமர்சனக் கூரம்பு மாரி பெய்த இந்த ஊடகப் போராளி, இன்றும் தன் ஊடகக் காண்டீபத்தைக் கரமேந்தி ஒலி கூட்டத் தயங்குவதில்லை. உடல் இயலா நிலை கண்ட இந்த 2005 ஆம் ஆண்டிலேதான், தமது 700 பக்க நூலை அவர் எழுதி, தமது அர்ச்சுன தபஸை நிறைவேற்றி, தேசியப் போராட்டத்துக்கு வலுவூட்டியிருக்கிறார்.
சிவநாயகம் ஐயா அவர்கள் நீடு வாழ, உடல் நலம் தேறித் தொடர்ந்தும் தேசியப் பணி புரிய, அனைவரும் கூடி, நெஞ்சார வாழ்த்துவோம்!

நன்றி

21.09.2005